**Source**: Tamil Murasu, Page 1
**Date**: 15 December 2018

# நோயாளியை ஆரம்பம் முதல் ஒரே மருத்துவக் குழு கவனிக்கும் முன்னோடித் திட்டம்

நோயாளி ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது முதல் வீடு திரும்பும் வரை ஒரே சுகாதாரப் பராமரிப்புக் குழுவால் பராமரிக்கப்படுவார். இந்த ஒருங்கிணைந்த பொது மருத்துவமனைத் திட்டத்தை அலெக்ஸாண்ட்ரா மருத்துவமனை செயல்படுத்தி வருகிறது. சிங்கப்பூரில் இதுபோன்ற முன்னோடி திட்டம் இயங்குவது இப்போதுதான்.

“பல்வேறு உடல்நலப் பிரச்சினைகளை எதிர்நோக்கும் மூத்த நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அவர்களின் தேவைகளைச் சிறந்த முறையில் கவனிக்கும் நோக்கம் கொண்டது இத்திட்டம்,” என அலெக்ஸாண்ட்ரா மருத்துவமனையும் சுகாதார அமைச்சின் சுகாதாரப் பராமரிப்பு உருமாற்ற அலுவலகமும் இணைந்து தெரிவித்துள்ளன.

சோதனை அடிப்படையில் அறிமுகம் கண்டுள்ள இந்த முன்னோடித் திட்டம் வெற்றி பெற்றால் பிற மருத்துவமனைகளுக்கும் இது விரிவுபடுத்தப்படும். இவ்வாண்டு ஜூன் முதல் 2,500 நோயாளிகள் இந்தப் புதிய திட்டத்தின்கீழ் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள்.

கடுமை நிறைந்த உடல்நலப் பிரச்சினை, ஓரளவு கடுமையான பிரச்சினை ஆகியவற்றைக் கொண்டோரும் மறுவாழ்வு சிகிச்சை மற்றும் சமூகப் பராமரிப்பை நாடுவோரும் எண்ணிக்கையில் அடங்குவர்.

தேசிய பல்கலைக்கழக சுகாதாரத் திட்டத்தின் ஒரு பிரிவான அலெக்ஸாண்ட்ரா மருத்துவமனை, சுகாதார அமைச்சின் சுகாதாரப் பராமரிப்பு உருமாற்ற அலுவலகம், குவீன்ஸ்டவுன் குடியிருப்பாளர்கள் குழு ஆகியவற்றின் ஒத்துழைப்பின் பயனாக இந்தச் சோதனைத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.

சிங்கப்பூரின் மேற்குப் பகுதியில் மூத்த நோயாளிகள் அதிகம் காணப்படும் பகுதிகளில் ஒன்று குவீன்ஸ்டவுன். இவ்வட்டாரத்தில் உள்ள கிட்டத்தட்ட 100,000 குடியிருப்பாளர்களில் 19 விழுக்காட்டினர் 65 வயதைக் கடந்தவர்கள்.

அலெக்ஸாண்ட்ரா மருத்துவமனையில் நோயாளி அனுமதிக்கப்படும் நாள் முதல் சிகிச்சை, மறுவாழ்வு பராமரிப்பு, வீடு திரும்புதல் ஆகிய கட்டங்கள் வரை முதன்மை மருத்துவர் தலைமையிலான ஒரே குழு சுகாதாரப் பராமரிப்பை மேற்கொள்ளும். தாதியர், மருந்தாளர், சிகிச்சையாளர், உணவு நிபுணர், மருத்துவ சமூகப் பணியாளர்கள், பராமரிப்பு மேலாளர்கள், நிர்வாகிகள் ஆகியோரும் அக்குழுவில் இருப்பர்.



அலெக்ஸாண்ட்ரா மருத்துவமனை மறுவாழ்வு நிலையத்தில் பராமரிக்கப்படும் நோயாளி. **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

*Source: Tamil Murasu* © Singapore Press Holdings Ltd.
Permission required for reproduction